# குறளும் கோவையும் ஒருவாசகம்

**வி.சேகர்**

"தேவர் <u>குறளும்</u> திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - <u>கோவை</u>
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
<u>ஒருவாசகம்</u> என்றுணர்." (நல்வழி, 40-ஔவை.)

திருவள்ளுவருடைய திருக்குறளும், வேதங்களின் முடிவான உபநிடதங்களும், திருஞானசம்பந்தர், அப்பர் சுந்தரர் பாடிய தேவராமும், மாணிக்கவாசகர் அருளிய திருக்கோவையாரும், திருவாசகமும், திருமூலர் அருளிய திருமந்திரம் ஒத்த நீதிக்கருத்துக்களால் ஒரு பொருளையே உணர்த்துகின்றன என்பது இப்பாடலின் கருத்து. இவற்றில் திருவாசகமும் திருக்கோவையாரும் பன்னிரு சைவத்திருமுறைகளில் எட்டாவதாக உள்ளன. இறைவனை வாழ்த்தும் திருவாசகம் புறத்திணைச் செய்யுளானதால் முன்னும், அகத்திணைச் செய்யுளான திருக்கோவையார் பின்னுமாக இடம் பெற்றுள்ளன. திருக்குறள் முத்துக்கள் பலப்பல, குறிப்பாகக் காமத்துப்பால் கருத்துக்கள் திருக்கோவையாரில் மிகுதியாக விரவிக் கிடப்பதாலேயே குறளுடன் சேர்த்து அது எண்ணப்படுகிறது.

இந்த இரு நூல்களில் உள்ள கருத்து ஒப்புமைகளைத் திரட்டிக் கோத்து ஆய்வு செய்து, அவை கூறும் காதல் தத்துவங்கள் காலத்தைக் கடந்த உண்மைகளா? கணினி மயமான, பரபரப்பான, இன்றைய உலக்கிற்கு ஏற்புடையனவா? என்பதைக் கண்டறிவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

**2. மாணிக்க வாசகர்:** விடை வாகனமுடைய சிவனைக் குதிரையில் ஏறிவரச் செய்தவர், குருந்த மரத்தடியில் மானுடச் சட்டையில் வந்த சிவனிடம் நேரே குரு உபதேசம் பெற்றவர். இச்செய்தியை,

"..இள ஏறு உகந்து ஏறியை பரிமாமிசை வரப் பண்ணிய வித்தக
திருந்திய வேதச் சிரப்பொருள் முழுவதும் பெருந்துறை இடத்துப் பெருஞ்சீர்க்
குருந்துறு நீழலில் கொள்ளை கொள்வோயே", என்று சிவப்பிரகாசர் (நால்வர் நான்மணி மாலை-20) கூறுகின்றார். இல்லறத்தில் இருந்து அரசனிடம் அமைச்சராகப் பணிபுரிந்ததால் உலகியல் ஞானமும் பெற்றவர் திருக்குறள் பயிற்சியும் ஆழமிக்க புலமையும் உடையவர் அவர் என்பதற்கு அவரது நூல்களே சான்று. He is one among the four premier singers of Tamil Saivism, the meaning of his name is, "He whose utterances are rubies." German Author <u>Heller</u> has included Mainkkavacagar as one of the twelve mysitics of the world in his work 'Prayer'. He is popular in the west because of the translation of Tiruvachagam by <u>G.U.Pope.</u> The other less known work Thirukkovaiyar treats 'love', the most universal emotion in the world, which Pluto calls as the instinct of immortality in a mortal creature'. The author of Thirukkovaiyar treats love on the pattern of bridal mysticism with metaphysical and esoteric significance. <u>RE Asher</u> of the Univ. of Edinburgh in his preface to the English translation of the Tirukkovaiyar, brought out by the Tamil University in 1989. says: Tirukkovaiyar

**3. வாழ்வின் குறிக்கோள்:** *'புருஷார்த்தங்களான'* அறம் பொருள் இன்பம் வீடு என்றவற்றுள், வீடு என்பது 'சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து' ஆதலின், அதைவிட்டு எஞ்சிய மூன்றையும் 'த்ரிவர்க்கம்' என்று வடநூல்கள் கூறும். இதனையே, 'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்' என்று தொல்காப்பியமும் - (1038) 'சிறப்புடைய மரபின் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படும் தோற்றம் போல', என்று புறநானூறும் (31), 'வடுவிலா வையத்து மன்னிய மூன்று' என்று நாலடியாரும் (114) பேசுகின்றன. தனிமனிதனுக்கான நீதியை அறத்துப் பாலிலும், அரசனுக்கான நீதியைப் பொருட்பாலிலும், காதல் நீதியைக்

காமத்துப்பாலிலும் கூறுவதால் குறளும் முப்பால் எனப்படுகிறது. இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்றவாறு அவை வேறுபடும்.

**4. இன்பம்:** இன்பம் இருவகைப்படும். பொதுவான உலக இன்பம் ஒன்று. மற்றது 'காமம்' எனப்படும் காதல் இன்பம். இறை இன்பம் இவை இரண்டுக்கும் அப்பால் பட்டது. பொருள்களின் மூலம் அடையும் உலக இன்பத்தில், அனுபவிக்கப் பயன் படும்பொருளுக்கு தன்னால் பிரயோசனம் பொன்னுக்கு அங்கு ஏது உண்டு?" என்பார் பட்டினத்தார்[1]. இது முதல் வகை. காதலன் காதலி இருவரும் துய்க்கும் (mutual) இன்பம் இரண்டாவது வகை. "தந்தது உன்தன்னை கொண்டது என்தன்னை சங்கரா ஆர்கொலோ சதுரர்? " எனும் நிலையில், வரம்பில் இன்பம் உடைய எண்குணத்தானகிய இறைவன் தர, உயிர் அனுபவிக்கும் அள்ள அள்ளக் குறையாத தெவிட்டாத இன்பம் (Bliss) மூன்றவாது வகை. இது

**5. காமமும் காதலும்:** 'காமம்' என்ற உரிச்சொல் 'நிறைவு' என்று பொருள்படும் என்பது தொல்காப்பியம். 'காமுறுவர்' என்ற சொல்லை 'விரும்புவர்' என்ற பொருளில் வள்ளுவரே எடுத்தாண்டுள்ளார். ஐம்புலன்களின் உதவியால் மனமும் உயிரும் பொருந்திப் பொருள்களைத் துய்ப்பதே காமம். இன்பத்தைக் கற்பனைத் திறனுடன் அணிநலம் பொருந்த உளவியல் நுட்பமும் உலகியல் நோக்கும் பொருந்தப் பாடியவர் வள்ளுவர். மூன்று குறள்களில், காம இன்பத்தைச் 'சிற்றின்பம்' என்று இழித்துரைப்பது தமக்கு உடன்பாடன்று என்பதை 'இனிதுகொல் தாமரைக் கண்ணான் உலகு' (1103) 'புலத்தலிற் புத்தேள் நாடு உண்டோ..' (1323) 'வேட்டபொழுதின் அவையவை போலுமே..' (1105).. என்று கூறுகிறார்.

"சொற்பால் அமுது இவள். யான் சுவை என்னத் துணிந்து இங்ஙனே
நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று நான் இவளாம் பகுதிப்
பொற்பு ஆர் அறிவார்.." (கோவை-8) என்ற தலைவன் கூற்றும், '<u>அஹம் ப்ரம்மாஸ்மி</u>' (நான் பிரம்மமாக இருக்கிறேன்), '<u>தத்வமசி</u>' (அது நீ ஆகிறாய்) என்ற மகாவாக்கியங்களை நினைவூட்டும். காமத்துப்பால் இலக்கியச் சுவைக்காக எழுதப்பட்டதன்று. அது கிழப்பருவத்தில் அசைபோட்டு மெல்லத்தகும் ஓய்வுப் பகுதியன்று. காதல்மணம் நுகரும் காளை குமரியர் கற்கத்தகும் பருவநூல், ஒழுக்கநூல், என்பார் மாணிக்கம்.[2] காதலை அனுபவிக்க அதற்குரிய பருவமும் பக்குவமும் (maturity) இன்றியமையாதது என்பதை,

"கன்னிகை ஒருத்தி சிற்றின்பம் வேம்பு எனினும், கைக்கொள் பக்குவத்தில் கணவன் அருள் பெறின், முன்னே சொன்னவாறு ஏன்? எனக் கருதி நகை ஆவள்" என்றும், " தன் பருவ மலர்க்கு மணம் உண்டு, வண்டு உண்டு, தண்முகை தனக்கும் உண்டோ?" என்பார் தாயுமானவர். (9-சுகவாரி 1,2)

**6. அகமும் புறமும் / களவும் கற்பும்:** அறம், பொருள், இன்பம் மூன்றனுள், 'ஒருவனும் ஒருத்தியும் கூடி நுகரும் இன்பத்தைக் குறிப்பதை 'அகம்' எனவும், மற்ற அறம் பொருள் இரண்டையும் 'புறம்' எனவும் கூறுதல் தமிழ் மரபு. இன்பம் நுகரும் மண ஒழுக்கத்தைக் களவு, கற்பு என்று தொல்காப்பியம் வகைப்படுத்தும். களவாது பிறர் அறியாதவாறு ஒழுகுதலும் இன்பம் துய்த்தலுமாகும். 'கற்பு எனப்படுவது களவின் வழித்தே' என்பது இறையனார் அகப்பொருள். களவு, காமப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியற் கூட்டம் என நால்வகைப்படும். பின் உள்ள மூன்றும் குறளில் வரவில்லை. காமப்புணர்ச்சி காட்சி, ஐயம் துணிவு குறிப்பறிதல்களை வாயிலாகக் கொண்டு நிகழ்வது. வள்ளுவர் இவற்றைத் 'தகையணங்குறுத்தல்', 'குறிப்பறிதல்' என இரண்டாக்கிக் கூறினார்.

**7. குறளின் செம்மை:** 7.1. அறத்துப்பாலின் இல்லறவியலுக்கு ஆதாரமானது காமத்துப்பால். இது, சங்க இலக்கிய அகப்பொருளினின்றும் சிறுகூறு பாடல் பொருளாலும் பெருங்கூறு பாடல் முறைமையாலும் வேறுபட்டு நின்று சங்க மரபின்

---

[1] திரு.வி.க. பட்டினத்தார் பாடல்கள் விருத்திரை, 1998 ப. 394.
2.வள்ளுவம் ப. 183.

மரூஉ வடிவமாகக் காணப்படுகிறது. அகப்பொருளின் அன்பின் ஐந்திணைக்கு உரிய, ‘முதல்’, ‘கரு’ மற்றும் ‘உரிப்பொருள்’ என்னும் மூன்றனுள், நனிசுருங்கிய குறள் வெண்பாக்கள், முதற்பொருள் கருப்பொருள்களைச் சிறிது புனையவும் இடம்தரா என்பதால் வள்ளுவர், உரிப்பொருளுக்குரிய காதல் உணர்வுகளை, அதிலும் மருதத்திணைக்குரிய ஊடல் உணர்வுகளையே அதிகம் படம்பிடித்துக் காட்டுகிறார். உழவு என்னும் அதிகாரத்தில், உழவு, மருதத்திணைக்குரிய தொழிலாதலின், ‘நிலம் புலந்து இல்லாளின் ஊடி விடும்’ (குறள்-1039) என்ற உரிப்பொருளைக் கூறுகிறார் களவொழுக்கத்தின் எல்லாக் கோவைத் துறைகளும் காமத்துப்பாலில் வரவில்லை. காதல் கதையைக் கோவைபோல் கூறாது, தலைவன் தலைவியின் கூற்றுக்களாக, அகத்திணை மரபு உணர்ந்து , அன்பு மணக்க, வேண்டும் இடங்களில் மாற்றம் செய்து, நாடக பாணியில் 250 குறள் வெண்பாக்களால் கூறுவது ஒரு புது மரபு.

7.2. அகநூற்களில் பயின்று வரும் சொற்கள் அனைத்தையும் அவையில் சொல்ல இயலாத சூழ்நிலை வரும். ஆனால், காமத்துப்பாலில் இடக்கர்ச்சொல்லே இல்லாமையும் பரத்தையர் பிரிவைச் சொல்லாமையும் குறள் சிறந்த ஒழுக்கநூல் என்பதைப் புலப்படுத்தகின்றன என்பார் உ.வே.சா[2]. சான்றாக,

‘கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும்

ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள’. (1101) என்ற குறளுக்கு உரை எழுதும் *பரிமேலழகர்*, ‘வேறு வேறு காலங்களில் வேறு வேறு பொருள்களான் அனுபவிக்கப் படுவன ஒரு காலத்து இவள் கண்ணே அனுபவிக்கப் பட்டன என்பதாம். வடநூலார் இடக்கர்ப்பொருளவாகச் சொல்லிய புணர்ச்சித் தொழில்களும் ஈண்டு அடக்கிப் கூறப்பட்டன’, என்கிறார். முத்தம் இல்லாது காதல் ஏது? அதைக்கூட, வெளிபடையாகக் கூறாமல், ‘அவள் வாயில் ஊறிய நீர் பாலும் தேனும் கலந்தால் போன்றது’ எனத்தலைவன் கூற்றாக்குகிறது. (குறள்-1121) இத்தகைய குறள்களுக்கு, மூல ஆசிரியரைப் பின்பற்றியே உரை ஆசிரியர்களும் எழுதும் மரபு உன்னதமானது.

**8. கோவை:** 8.1. கோவை என்பது அகப்பொருள் துறைகள் பலவற்றையும் காதலர் இருவரிடமும் நிகழும் நிகழ்ச்சிகளை நிரல்படக்கோத்துக் கட்டளைக்கலித்துறை யாப்பில் ஒரு வரலாறு போல், கூற்றும் மாற்றமும் அமையப் புனையப்பட்டது பொருள் தொடர்நிலைச் செய்யுள். இதில் வரும் காதலர்கள் கற்பனைக் காதலர்களே. பேசப்படும் களவித் தலைவன் பெயர் கூறுதல் மரபன்று. காதலர் கண்ட இடம், பழகிய சோலை முதலியவற்றைச் சொல்லும் போதும், உவமைகளிலும் ஓர் அரசனையோ தெய்வத்தையோ மலை, நாடு, ஆறு, பண்பு, செயல்கள் முதலியவற்றையோ புகழ்ந்து கூறுவது உண்டு.

8.2 திருவள்ளுவருக்குக் காலத்தால் பிற்பட்ட <u>மணிவாசகரோ,</u> 96 வகைப் பிரபந்தங்களில் ஒன்றான, கோவை இலக்கியத்திற்கு <u>முழுவதுமாக </u>அடித்தளமிட்ட முன்னோடி. நின்றசீர் நெடுமாறனைப்பற்றிப் பாடிய பாண்டிக்கோவை காலத்தால் முற்பட்டது எனினும், 175 துறைகளில் 326 பாடல்களுடன் முழுமையாக இல்லை. குமரகுருபரரால், ‘ஐந்திணையுறுப்பில் நாற்பொருள் பயக்கும் காமம் சான்ற ஞானப்பனுவல்’ எனப்போற்றப்படும் திருக்கோவையார் (கோவை) 25 அதிகாரங்களில் ‘பாட்டியல் நூல்கள்’ கூறும் 400 துறைகளும் உள்ளடக்கிய 400 செய்யுட்களை உடையது. பாட்டுடைத் தலைவனான சிவனது புகழைப் பாடியதுடன் களவித் தலைவனின் இன்பத்தையும் உடன் பாடிய பெருமை மாணிக்கவாசகரையே சேரும்.

8.3. தலைவியின் கண்களின் இயல்புகள் பலவற்றிற்கும் தில்லைப் பெருமானின் திருவருள் தொடர்பாய் உள்ளவற்றையே உவமை கூறுவது இதற்கு ஒரு சான்று,

“ஈசற்கு யான் வைத்த அன்பின் அகன்று, அவன் வாங்கிய என்
பாசத்தின் கார் என்று, அவன் தில்லையின் ஒளி போன்று, அவன் தோள்
பூசு அத்திருநீறு என வெளுத்து, அங்கு அவன் பூங்கழல் யாம்
பேசு அத்திருவார்த்தையில் பெருநீளம் பெருங்கண்களே” (கோவை-109)

8.4 கோவைக்குப் பழைய உரை ஒன்றும் பேராசிரியர் உரை ஒன்றும் உள்ளது. பேராசிரியர் தனது உரையில், தில்லைக் கூத்தப்பெருமானைச் சார்ந்து தோன்றும்

---

3. உவேசா. 1936இ ப. 17.

பொருள்களை ‘*அறிவின் நூற்பொருள்*’ என்றும், அகப்பொருளை ‘உலக நூல் வழக்கு’ என்றும் குறிப்பிட்டுள்ளார். இவற்றை ஒவ்வொரு கோவைப்பாடலிலும் காணலாம்.

9. **நாயகன் நாயகி பாவனை:** 9.1. சைவ நாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள் மக்கட் காதலுக்கென வகுத்த அகத்திணைச் சுவடுகளைப் பின்பற்றிப் பக்திப் பாசுரங்களை பாடிப் பாமரரையும் கவர்ந்துள்ளார்.

“முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவன் இருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே”

என்ற அப்பரின் பாடல், நாயகன் நாயகி பாவனையில் அமைந்துள்ளது. கல்கி, ‘சிவகாமியின் சபதம்’ என்ற நாவலில் கதாநாயகி சிவகாமியின் தெய்வீகக் காதலை வர்ணிக்க இந்தப் பாடலையே பயன்படுத்தியுள்ளார். மாணிக்கவாசகரும் தன்னைக் காதலியாகப் பாவித்து, “சிவன் திரள்தோள் கூடுவேன், கூடி முயங்கி மயங்கி நின்று ஊடுவேன் செவ்வாய்க்கு உருகுவேன்’ (திருவாசகம் 9-17) என்று பாடுகிறார்.

9.2 வைணவ மரபினரான ஆண்டாள் தன்னை நாயகியாகவும் அரங்கனையே நாயகனாகவும் பாவித்து உருகிப் பாடிய, ‘மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன்..’, ‘மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத.. மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து என்னைக் கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ நான்”[3]. என்பவை மானிடக்காதலை ஆண்பெண் சேர்க்கையை தெய்வீக நிலைக்கு உயர்த்திய சாதனையைப் பறைசாற்றுகிறது.

**10 சொர்க்கபோகமே கல்வி இன்பம்:** 10.1 ஆண் பெண்ணுக்கிடையில் நிகழும் தூய கவர்ச்சியே காதல், காதலால் கிடைக்கும் கல்வி இன்பம் இகழப்படக்கூடியது அல்ல. அதன் மூலமே, ஆன்மீக இன்பத்தையும் எளிதில் அடைய முடியும் பகவான் இரஜனீஷின் கொள்கை. ‘Tiruvalluvar helps one to reach the superconsciousness through sex. ..The closer one looks at the various manifestations of the human love, the more one is conscious of a congruity between spiritual love and sex’[5]

‘தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிது கொல்
தாமரைக் கண்ணான் உலகு’ என்ற குறள் (1103),

வைகுண்ட வாழ்வின் இன்பம் காதலியிடம் அநுபவித்த இன்பத்திலும் உயர்வானதோ? என வினவுகிறது.

10.2 ‘விரும்பிய எல்லாம் தலைவியாகிய சிந்தாமணியிடம் கிடைக்கிறது’, என்று தலைவன் சொல்வதாக வரும் குறளே,

வேட்ட பொழுதில் அவைஅவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள் (குறள்-1105) என்பது.

10.3 ‘புணர்ச்சி என்பது உள்ளத்திற்கு மட்டும் அல்ல, உடல் நலத்திற்கும் உகந்தது. மன இறுக்கத்தையும் மனஅழுத்தத்தையும் நீக்கி, நோய் எதிர்ப்பு சக்தியை கொடுத்து மனித வாழ்நாளை நீட்டிக்கிறது.” (Source: Sexual Healing, by Alice Park in TIME, dt Jan 19,2004, pp 38-39) ‘Sex proves to be surest means of arousing and sustaining love. The permanence of the species is assured and at the same time the greatest variety of the individual encouraged… Love is no episode; it imposes itself like a divinely regulating inspiration and offering the promise of perfection’.[4]

---

4. நாச்சியார் திருமொழி 1,667.
5. T.P. Meenakshi sundaram, 1999 , in The Philosophy of Tiruvalluvar quating D’Arcy PP. 113.
6. ibid quoting D’ Arcy PP.113 Para-3,10..
7. தெ. பொ. மீ. வள்ளுவரும் மகளிரும் ப.5.

**11 இல்லறமே நல்லறம்:** 11.1 'இல்லறம் அல்லது நல்லறம் அன்று,' 'மெல்லியலாள் தோள் சேர்', என்பவை ஔவை வாக்குகள். இல்லறம் என்பது, "இருவர் முனைப்படங்கி பால் வாழி ஓடி, இறைபணிநின்று அன்பு கண்ணாக ஒருவரை ஒருவர் உணர்ந்து ஒன்றாவது என்பார் தெ.பொ.மீ[7]. முனிவர் கடன் கேள்வியினாலும், தேவர் கடன் வேள்வியினாலும், பித்ரு கடன் புதல்வரைப் பெறுவதாலும் தீரும். ஆடவரை மணந்து, புதல்வரைப் பெற்று இன்பமாக வாழ்வதே மகளிர் அழகைப் பெற்றதன் பயன். அப்படி வாழாது தனியாக முப்பை அடையும் மகளிரை, ஒருவனின் செல்வம், இல்லாத ஒருவனுக்கு ஈயாமல் சீரழிவது போன்றது இன்பது (குறள-1007) கோவை ஆசிரியரும், "சுரும்புஇவர் சாந்தும், தொடுகடல் முத்தும் வெண்சங்கும் எங்கும் விரும்பினா் பால் சென்று மெய்க்கு அணியாம்...கரும்பன மென்மொழியாரும் அந்நிர்மையார் காணுநகர்க்கே" (248) என, பிறந்த விட்மை விட்டுப் புகுந்த வீடு செல்லும் மகளிர் நிலையைச் சந்தனத்திற்கும் சங்கிற்கும் உவமையாக்கிக் கூறுகிறார். இத்துடன் யாழின் இசையையும் கலித்தொகை உவமையாகச் சேர்த்துள்ளது.

"ஏழ்புணா் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதான் என்செயும்
சூழுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே. " (பாலைக்கலி-9)

11.2 அவளது அடக்கம் எனக்கில்லையே, அதனால் பெண்மையே பெருமை உடையது எனத் தலைவன், "கடல் அன்ன காமம் உழந்தும் மடல் ஏறாப் பெண்ணின் பெருந்தக்கது இல்," (குறள்-305) என்கிறான்

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின"-என்ற குறள்-54 கருத்தே, விஞ்சிய கற்புடைய தலைவி என்பதை

"கற்பு அந்தி வாய் மீனும்கடக்கும்...(கோவை-304) என வந்துள்ளது.

**12. இல்லறம் வாழ்வு எவ்வாறு மனிதனின் சுயநலத்தைப் போக்க உதவுகிறது** என்பதை 12.1 தனக்கென வாழும் தனிமிருகத்தின் மனக்கோள் நிமிர்த்து மற்றவர் இன்பமும் துன்பமும் தனதா அன்பு பாராட்ட.. பக்குவம் செயும் நற் பள்ளிசாலை.."[8] என்று பாடுவார் சுந்தரம் பிள்ளை. As per Chinese philosophy, any entity including organizations, is composed of two opposing yet interrelated forces: the passive female or *yin*, and the active male or *yang*. ஆண், மூளை சிறந்தவன்', பெண், இதயம் சிறந்தவள்' எனும் டென்னிஸன் வாக்கை முவ குறிப்பிடுவார்.9

12.2 இல்லறத்திற்கும் இறைத்தத்துவத்திற்கும் இணைபிரியா ஒற்றுமை ஒன்று உண்டு. இரண்டிலும், அனுபவிக்கும் போது, மனிதன் 'தன்னை இழந்து விடுகிறான்'. ஒன்று 'momentary pleasure' எனப்படுவது. மற்றொன்று இறைஇன்பமான பேரானந்தம் (joy or ecstasy or Bliss) எனப்படுவது, ஒன்று தற்காலிகமானது, (Short term) மற்றது நிரந்தரமான (longterm) சுகம் தருவது.

12.3. ஆண்பாலின் பெருமிதத்தையும், உரிமையையும் மனைவி மதிப்பது, பெண்பாலின் அருமையையும் நிறையையும் நாணத்தையும் கணவன் மதிப்பது, காவடிப் பாரம் இருபக்கம் சமமாக இருப்பது போல, (குறள் 1196) ஒருவரை ஒருவர் அனுசரித்து (reciprocal) விட்டுக் கொடுத்து, தன்முனைப்புக் குறைத்து சார்ந்து வாழும் இயற்கை நியதியை இல்லறத்தின் அடிப்படையாக வள்ளுவர் சொல்லுவார். பரத்தமையைக் கண்டிக்காத அக்காலச் சமுதாய சூழ்நிலையில், 'வரைவின் மகளிர்' என அதிகாரம் வகுத்ததன் மூலமும், பிறன்மனை விழையாத பேராண்மை பேசுவதன் மூலமும் ஆண்களுக்கு கற்பு (Chastity) தேவை என்கிறார்.[10] பாரதியும், 'கற்புநிலை என்று சொல்லவந்தால் இரு கட்சிக்கும் அ∴து பொதுவில் வைப்போம்' (விடுதலைக்கும்மி - 6.5) என்பார். கோவையும், உடன்போகிய தலைவியைத் தேடிச்செல்லும் செவிலி, கூடிவரும் இருகாதலர் எதிர்ப்பட அவர்களை வினவுவதாகவும்,. ஆடவன், 'அவனைப்

---

8. 172-183: களம்2 அங்கம்2 மனோன் மணீயம் ப.53.
9. திருவள்ளவா் அல்ல வள்ளுவம் ப.116.
வசெகு, 2000 வாழும் வள்ளுவம் ப.116.

பார்த்தேன், நீ செவிலி வினவும் அவளைக் கண்டாயோ? எனத் தன் காதலியைக் கேட்பதாகவும் ஒரு நாடகம் நடத்துகிறது.

"மீண்டார் என உவந்தேன் கண்டு நும்மை இம்மேதகவே
பூண்டார் இருவர் முன் போயினரே புலியூர் எனை நின்று
ஆண்டான் அருவரை ஆளிஅன்னானைக் கண்டேன் அயலெ
தூண்டா விளக்கனையாய் என்னையோ அன்னை சொல்லியதே" (கோவை-224)

என்ற பாடல், பிறன்மனை நோக்காத பேராண்மை ஆடவரிடமும், பிறஆடவரை நோக்காத கற்பெனும் திண்மை பெண்டிரிடமும் இருந்தன, இருக்க வேண்டும் என்பதையே கூறுகிறது.

**13. உவமைகள் - கற்பனை – சொல் - செயல் - கருத்து – ஒற்றுமைகள்:**

13.1 சிறந்த குறிக்கோள்களை உவமையாகக் கூறுவதில் வள்ளுவர் வல்லவர். நேரே சிற்றின்பத்தைக் கூறினும், உள்ளுரையாகப் பேரின்பத்தையும் கூறும் குறளின் நடையே, கோவையிலும் பின்பற்றப்பட்டுள்ளது. கல்வி இன்பம் என்றும் புதிது புதிதாயப் பெருகி நிற்பதைக் கூறும்,

'அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்
செறிதொறும் சேயிழை மாட்டு.' என்ற குறளே (1110) கோவையில்,

"உணர்ந்தார்க்கு உணர்வு அறியோன் தில்லைச் சிற்றம்பலத்து ஒருத்தன்
குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச் செவ்வாய் இக்கொடியிடை தோள்
புணர்ந்தால் புணரும்தொறும் பெரும் போகம் பின்னும் புதிதாய்
மணந்தாழ் புரிகுழலாள் அல்குல் போல் வளர்கின்றதே" –(கோ.9) மற்றும்

"ஆனந்த வெள்ளத்து அழுந்தும் ஓர் ஆருயிர், ஈர் உருக்கொண்டு
ஆனந்த வெள்ளத்திடைத் திளைத்தால் ஒக்கும்.. வற்றாது முற்றாது இவ்வணிநலமே" (307) போன்ற பாடல்களில் வந்து சிற்றின்பத்தைச் சிவானந்தத்திற்கு இணையாக்குகிறது.

13.2 தலைவியைக் கண்ட தலைவன் ஐயம் கொண்டு தெளிவதாக உள்ள "யமன் விடுத்த தூதோ," (கோவை-2) என்பது, 'பண்டறியேன் கூற்றென்பதனை, இனி அறிந்தேன்.." என்பதே (குறள்-1083). "அணங்கு அல்லல் .. பெரும்பணைத்தோளி.., " (கோவை-3) என்பதும் "அணங்குகொல் மாதர் கொல் மாலும் என் நெஞ்சு.." என்ற குறளின் (1081) கருத்துக்களைத் தழுவியவையே.

13.3 காதல் பிணிக்குக் காரணம், 'ஏதிலார் போலப் பொது நோக்கு நோக்குதல்' (குறள்-1099) அன்போடு நோக்குதலே அதற்கு மருந்தாகும். "பிணியும் அதற்கு மருந்தும் ..பெருந்தோளி கடைக்கண்களே" (கோவை-5) மற்றும், "உழைகொண்டு ஒருங்கு இரு நோக்கம் பயின்ற எம் ஒண்ணுதல்", கோவை-65 என்றதும்,

"இருநோக்கு இவள் உண்கண் உள்ளது ஒரு நோக்கு
நோய்நோக்கு ஒன்று அந்நோய் மருந்து" (1091) என்ற குறளை ஒத்துள்ளது.

13.4 சாவா மருந்து அமுதமே. "உறுதோறும் உயிர்தளிப்பத் தீணடலால் பேதைக்கு அமிழ்தின் இயன்றன தோள்" என்பது குறள் (1106)" ..நம் பெண் அமிழ்தம் வருந்தேல்.. "என்கிறான் தலைவன். (கோவை-394) அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு. முறையற்ற காமம் வரம்பு மீறுவதால் வரும் விளைவுகளே AIDS எனப்படும் தீராத நோய்.

13.5 போர்க்களத்திற்கு வராத பகைவரும் என் வலிமையைப் பற்றிக் கேட்டு அஞ்சுகிறார்கள். அத்தகைய வலிமை இவள் முன் அழிந்ததே, எனும் தலைவன் கூறும்,

"ஒண்ணுதற்கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும் என் பீடு" (1088) என்ற குறளை ஒட்டியே

"தேம்பல் துடியிடை மான்மடநோக்கி.. என் ஆற்றல் அகற்றியதே" (கோவை-21) மற்றும்,

"தலைப்படும் சால்பினுக்கும் தளரேன் ..மலைச்சிறுமான் விழியால் அழிவுற்று மயங்கினனே" (கோவை-25) என்னும் தலைவனின் கூற்றுகள், தலைவனின் நெஞ்சுறுதி

அழிந்ததைக் கூறுகிறது. நிறைவேறாத காதல் மனிதனை என்ன பாடுபடுத்தும் என்பதும், விட்டுக்கொடுக்கும் மனப்பண்பு இல்லாமையால் ஏற்படும் விவாகரத்துக்கள் குடும்ப நிம்மதியை எவ்வாறு நாசம் செய்து, சமுதாயச் சீரழிவுக்கும் வழிவகுக்கின்றன என்பதும் அனைவரும் அறிந்ததே.

**14. மென்மையும் மாதரும்:** 14.1. 'மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்

செவ்வி தலைப்படுவார் என்ற குறளுக்கு (1289) காளிங்கர் உரை எழுதும் போது, 'மலர்களை விடக் காமம் மென்மையானது. செவ்வி என்பது காலம், அழகு எனப் பொருள்படுவது. ஈண்டு அழகு என்னும் பொருளில் வந்துள்ளது. வண்டு இதழ்மேல் இருந்தோ சுற்றிப் பறந்தோ சுரக்கும் காலம் அறிந்து தேன் நுகரும் போது இதழ் கூட மடிவதில்லை என்பதை, 'தோடு மன்னுதம் சுரும்பொன வீழவே' என வில்லிபுத்தூரார் பாடுவார். அதுபோல மலரைக் கசக்கி நுகராமல் முகர்ந்து நுகர்வார் சிலர்' என்கிறார். கோவைத்தலைவன் அவர்களில் ஒருவன். சான்றாண்மை, நல்லறிவு, உலக நடை உடையவனாக அவன் இருக்கின்றான்.

14.2 கண்ணுக்கு மைதீட்டும் சிறிது நேரம் கூட காதலர் உருவம் மறையக்கூடாது எனக் கருதி மைதீட்டுவதையே தலைவி விட்டு விட்டாள். இந்தச் செய்தியே, 'கண்உள்ளார் காதலவராகக் கண்ணும் எழுதேம் கரப்பாக்கு அறிந்து' என்ற குறளிலும் (1127), எழுதில் கரப்பதற்கே அறி வாள் ஒழிகுவது அஞ்சனம்' என்ற கோவைப் (334) பாடலிலும் உள்ளது.

14.3 "அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்

அடிக்கு நெருஞ்சிப் பழம்"(1120) என்னும் குறளே, தலையின் கால்கள் செம்பஞ்சியை மிதிக்கினும் கூட மிகவும் நடுங்கும் மென்மையான இயல்பின என்ற, பொருளில், "அம்பஞ்சி புகமிக நீண்டரி சிந்தும் கண்ணாள் செம்பஞ்சியிற் மிதிக்கிற் பதைக்கும் மலர் சீறடிக்கே" (209) "அனிச்சம் திகழும் அம் சீறடி.." (211) " தண் அனிச்சப் பூமேல் மிதிக்கின் பதைத்து அடி பொங்கும் நங்காய்…"(228) கோலத்தவிசின் மிதிக்கின் பதைத்தடி கொப்புள் கொள்ளும், (238) எனக் கோவையில் வந்துள்ளது.

**15 குவளையும் கண்களும்**: 15.1 தலைவி கண்களுக்கு உவமையாகமாட்டோம் என்று குவளை மலர்கள் தலைகுனிந்து கொண்டன எனும் 'காணில் குவளை கவிழ்ந்து நிலன் நோக்கும் மாணிழை கண்ஒவ்வோம் என்று.' (.1114) என்ற குறளே, அழகிய குவளை மலர்கள் இரவில் மலர்ந்துள்ளன. நின் கண்களை அவை ஒக்குமா என்பதை வந்து காண்பாயாக எனத் தலைவிக்குத் தோழி சொல்வதாக உள்ள,

"வண்ணக் குவளை மலர்கின்றன சினவாள் மிளிர்கின்றன நின்

கண்ஒக்குமேல் கண்டுகாண் வண்டு வாழும் கருங்குழலே." என்னும் பாடல் கொண்டுள்ளது. (கோவை.162)

15.2 ஊடியதால் செந்தாமரைபோல் சிவந்த தலைவியின் கண்கள், தலைவனின் அன்பு நோக்கால் கரிய குவளை மலர்களாக மாறிவிட்டன என்பதே,

"சின வாள்மலர்க்கண் செந்தாமரைச் செவ்வி ..வியன் நோக்கு எதிர் நோக்க முகமடுவின்

பைந்தாள் குவளைகள் பூத்து இருள் சூழ்ந்து பயின்றனவே" என்பதாக உள்ளது. (கோவை 363)

**16. இல்லாத இடை:** இல்லாதது போல் இருந்து, "பொய்யோ எனும் இடை." என்று கம்பன் போன்ற கவிஞர்களால் புனையப்பெறுவது. மலரின் காம்மைக் கிள்ளி எறியாமல் அணிந்த பெண்ணின் இடை பாரம் தாங்காமல் ஒடிந்து விட்டது என்ற கருத்தைக்கூறும்,

'அனிச்சப்பூ கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு

நல்லா படாஅ பறை' என்ற குறளே (1115)

"பொட்டணியான் நுதல், போய் இறும் பொய்போல் இடையெனப் பூண்

இட்டணியான், தவிசின் மலரன்றி மிதிப்பக்கொடான்

மட்டணி வார்குழல் வையான்மலர், வண்டுறுதல் அஞ்சிக், ..காதலனே" எனக்கோவையில் (303), இடை ஒடிந்து விடுமோ என அஞ்சி நெற்றியில் பொட்டும்

இடான், வண்டுக்கு அஞ்சி குழலில் மலரையும் வையான், காலுக்கு மெத்தை போல் கட்டிலில் மலரை அன்றிப் பிறவற்றை இடான் என்னும் பொருளில் மணிவாசகரால் எடுத்தாளப்பெற்றுள்ளது. இது குறளையும் விஞ்சிய கற்பனை.

**17. உடலும் உயிரும்:** 17.1. 'உடம்போடு உயிரிடை என்ன மற்றன்ன

மடந்தையொடு எம்மிடை நட்பு' என்ற குறளில் (1122) தலைவன், தலைவி தனது உயிராய் இருக்கிறாள் என்கிறான். உயிரும் உடலும் போலவும், தேனும் சந்தனம் போலவும், தலைவனும் தலைவியும் இணைந்து பிணைந்து இருப்பதாகத் தோழி சொல்வதாக,

"சீர் இயல் ஆவியும் யாக்கையும் என்ன சிறந்தமையால்

கார் இயல் வாள்கண்ணி எண்ணகலார் கமலம் கலந்த

வேரியும் சந்தும் வியல் தந்தெனக் கற்பின் நிற்பர்," (கோவை-301) என்றும் 'மாயத்ததாகி இதோ வந்து நின்றது என்மன்னுயிரே' (39) என்றும் கோவைத் தலைவன், தோழனிடம் தலைவி தனது உயிர் எனச் சொல்கின்றான்.

17.2. தலைவியோ, என் உயிர் போலும் தலைவர் என்பதை,.

"ஆவியன்னாய் கவலேல் அகலேம் என்று அளித்தொளித்த ஆவியன்னார்.." என்கிறாள் (கோவை-37)

17.3. உடலில் இருந்து உயிர் நீங்குவதே சாக்காடு. காதலியைப் பிரிந்த தலைவனும் அவளைப் பிரிந்த தன்னை நடைப்பிணமாகவே கருதுகிறான் என்பார் வள்ளுவர்.

'வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை

சாதல் அதற்கன்னள் நீங்குமிடத்து' (குறள் 1124)

**18 அலர்:** 18.1 அலர் என்பது 'காதல் கிசுகிசு' போன்றது. தலைவன் தலைவியின் களவொழுக்கத்தை பிறர் அறிந்தால் தலைவியிடம் சேர்த்து வைப்பார்கள் என்பதால், தலைவன் அலரைப் பாக்கியமாக வரவேற்கிறான். தலைவியோ, அலரால் நாணுக்கு இழுக்கு நேருமே, பெற்றோர் கவலைப்படுவார்களே எனத் துயர் உறுகிறாள். 'நெய்யை ஊற்றி நெருப்பை அணைக்க முயல்வது போல்தான், தலைவியின் காமத்தை அலரால் தணிக்க முயல்வதும்'. இந்த குறளின் (1148) கருத்தே, "அலராய் விளைகின்றது அம்பல் கை மிக்கு ஐயமெ மய் அருளே…" (180) எனக் கோவையில் உள்ளது.

18.2 மடல் ஏறுதல் என்பது, காதலியால் புறக்கணிக்கப்பட்ட காதலன், பனங்கருக்கால் செய்த குதிரைமேல் ஏறி, ஊர்ச்சந்தியில் ஊரார் அறிய உயிர் துறக்க செய்யும் முயற்சி. இதன் நோக்கம் ஊரார் தலையிட்டு மணம் முடித்து வைப்பர் என்பதே. கோவை காட்டும் உயர் பண்பினனான காதலன், விரக்தியில் மடல் ஏறத் துணிவதை,

"ஈசன சாந்தும் எருக்கும் அணிந்த ஓர் கிழிபிடித்துப் பாய்ச்சினமாவென எறுவர் சீறூர்ப் பனைமடலே" (74),

"பெண்ணை மடல்மிசை யான் வரப்பண்ணிற்று ஓர் பெண்கொடியே" (75) என்னும் கோவை, காமத்துயரை வழ அவள் தந்ததால் தலைவன் வீரமும் நாணமும் துறந்தான் என்பதைக் கூறும்,

"நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்

காமுற்றார் ஏறும் மடல்" (1133 என்ற குறளை நினைவூட்டுகிறது.

**19 பிரிவும் ஆற்றாமையும்:** 19.1 குறளும் கோவையும் கற்பு நெறியில் வரும் பிரிவைப் பேசுகின்றன. காமத்துப்பாலில் வரும் 25 அதிகாரங்களில் 18ம். 400 கோவைப்பாடல்களில் 126ம் பிரிவு பற்றியேப் பேசுக்கின்றன. வரைபொருட் பிரிவு (திருமணம் செய்வதற்கு பொருள்திரட்ட)33 பாடல்களிலும், மேலும், ஓதல் பிரிவு காவல் பிரிவு (intemal security), தூது (peace talks), வேந்தற்கு உற்றுழிப்பிரிவு (Army service) பொருள்வயின் பிரிவு (தன் பொருளால் தான் இல்லறம் நடத்த) பரத்தையர் பிரிவு என ஆறு வகைப்பிரிவை விரிவாகக் கோவை கூறுகிறது. இரு பிரிவுகளை மட்டும் கூறும் குறளிலோ, பொருள் மயக்கத்தால் தலைவன் நெடுந்தொலைவு சென்றதை தலைவி குறிப்பிடுவதாகவும், (குறள்-1230) வேந்தற்கு உற்றுழிப்பிரிவில் (to

help the king in the battle) சென்ற தலைவன், “வேந்தன் போரில் வெற்றி வாகை சூடட்டும், நானும் மாலையில் தலைவியை அடைந்து விருந்து தருவேன்” (treat) என்பதாகவும் வருகிறது. (குறள்-1268) ‘சேட்சென்றார்’ எனக் கூறி, கொடியர், வன்கண்ணர் துறந்தார் நீத்தார் எனத் தலைவரைத் தலைவி குறிப்பிட்டுப் பிரிவுத் துயரத்தை உரைக்கிறாள் (குறள்-1231,1269)

19.2 “பேய்வயினும் அரிதாகும் பிரிவு” என்பது கோவை (343). வள்ளுவர் காலத்தில், சாலைகள், வாகனங்கள், தொலைத்தொடர்பு ஆகிய வசதிகள் எதுவும் இல்லாததால், பார்த்த ஒருவரைத் திரும்பவும், அவர் பேசுவதைக் கேட்போமா என்ற நிச்சியமின்மை நிலவியது. ‘புலவரகளும் பிரிய நேரும் போது வருந்துவார்கள்’ என்பது (குறள்-394). பிரிந்த காதலர் திரும்பி வரும் வழியைப் பார்த்துக் கண்கள் ஒளிமங்கி விட்டன. நாட்களைச் சுவரில் கோடுபோட்டு எண்ணிக் காதலியின் விரலே தேய்ந்து விட்டது என்பது,

‘வாள் அற்று புற்கென்ற கண்ணும் அவர் சென்ற
நாள் ஒற்றித் தேய்ந்த விரல்’ என்ற (குறள்-1261) இதையே,

“தடங்கண் உண்ணீர் உக ஒளிவாடிட நீடுசென்றார் சென்ற நாள்
எண்நீர்மையின் நிலனும் குழியும் விரல் இட்டு அறவே” என்று கோவையில் (345) காண்கிறோம்.

19.3. ‘பிரிவுச் செய்தியை தலைவிக்கு எவ்வாறு சொல்லுவேன்’ என்ற தலைவனின் தவிப்பை, “..செப்பும் வகையில்லை.. இருட்டின் புரிகுழலாட்கு எங்ஙனே சொல்லி ஏகுவனே” (270), எனவும்,

“பிரியாமையும் உயிர் ஒன்று ஆவதும் பிரியில் பெரிதும்
தரியாமையும் ஒருங்கே நின்று சாற்றினார் ..இனி என்னாம் புகல்வதுவே.” (311) என்றும் கோவை சொல்லும். இந்தக் கருத்து,

“சொல்லாமை உண்டேல் எனக்கு உரை மற்று நின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை”,

என்ற குறளை சிந்திக்க வைக்கிறது (1151)

**20 நெஞ்சமே தஞ்சம்:** பிரிந்தவர் பின் செல்லும் பேதை நெஞ்சத்தை, “வருந்தும் மடநெஞ்சமே என்னையாம் இனி வாழ்வகையே” எனத் தலைவி நொந்து கொள்கின்றாள் (கோவை-272) ‘அவர் வெறுக்கமாட்டார் என்று போகிறாய் நெஞ்சே, கெட்டவர்க்கு நண்பர் இல்லை என்பதால் அவரிடம் போகிறாயா?’ எனத் தலைவி வினவுவதே, ‘கெட்டார்க்கு நட்டார் இல் என்பதோ நெஞ்சே நீ பெட்டாங்கு அவர் பின் செலல்’ என்ற (குறள்-1293). நம்மைக்கூடிப் பிரிந்தவரை வருத்தாமல் என்னை ஏன் வருத்துகின்றாய்? எனத் தலைவி கேட்பதே, “..கார்ப்புன்னை பொன்ன விழ் முத்த மணலிலே.. தேர்ப்பின்னை சென்ற என்நெஞ்சு என்கொலாம் இன்று செய்கின்றதே” என்பதாக (கோவை 273) வந்துள்ளது.

**21 கனவும் நனவும்:** கனவு, ‘உறங்கும் மூளையின் கற்பனை’, நனவு, ‘விழித்த மூளையின் கனவு’ என்பார் முவ[5]. கணவரைக் கனவில் காண்பதலாயே உயிர்தரித்துள்ள தலைவி, (குறள்-1213), ‘நனவு என ஒன்று இல்லாவிடின் கனவில் கண்டவர் நீங்கமாட்டாரே’ என்று வருந்துவாள். (குறள்-1216) கனவில் காதலியின் ‘தோள் மேல் இருப்பவர்’ விழித்தவுடன் நெஞ்சுக்குள் போய் விடுவார் என்பதே,

‘துஞ்சும் கால் மேலராகி விழிக்கும் கால்
நெஞ்சத்தவர் ஆவர் விரைந்து’ (குறள்-1218)

கோவைத் தலைவியும், கனவில் தழுவியவரை அணைக்க மறுத்தேன், விழித்துக்கொண்டேன் “ஆவா கனவும் இழந்தேன் நனவு என்று அமளியின் மேல் பூவார் அகலம் வந்தூரன் தர..பாவாய் தழுவிற்றிலேன். விழித்தேன் அரும் பாவியனே” (355) என வருந்துகிறாள். தலைவி தோழிக்குக் கூறும்,

---

11. குறள் காட்டும் காதலர், ப.22.

"அவர் என் நெஞ்சார் விலக்கினும் நீங்கார் நனவு கனவும் உண்டேல்

பஞ்சார் அமளிப்பிரிதல் உண்டோ எம் பயோதரமே" (கோவை 378) என்பது, அவரை இகழ்தல் இழிவென்று அவர் பண்புகளையே எனது நெஞ்சு எண்ணும் எனத் தலைவி சொல்லும் குறளைத் தழுவியதே (1298)

**22 பொருளும் ஒரு பொருளா?:** 22.1 இனிய வாழ்க்கைக்கு, பொருள் இன்றியமையாதது. 'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்' என்னும் கோவை (332) சிறந்த பொருளைத் திரளாக ஈட்டியவர்க்கு அறமும் இன்பமும் எளிதில் கிடைக்கும் என்ற குறளை (760) ஒத்ததே. 'இன்மை என ஒரு பாவி மறுமையும் இம்மையும இன்றி வரும்' (குறள்-1042) என்பதும், "வறியார் இருமை அளியார்..."என்ற (கோவை-333) பாடலில் பிரதிபலிக்கிறது. என்பதை இழந்து எதைப் பெறுவது? "பொன் போன்ற தலைவியை வருந்த விட்டுப் பிரிந்து வந்து, பொருளாகிய பொன்னைத்தேடுவது ஒரு பொருட்டோ" (கோவை-344) எனத் தலைவன் தன்னையே நோகிறான்.

22.2 "செல்வம் என்பது சிந்தையின் நியையே" என்பார் குமரகுருபரர். "ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும் ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை.. "என்பது கலித்தொகை (பாலைக்கலி-18) வேகமான பொருளாதார விஞ்ஞான வளர்ச்சியில் முழுக்கவனமும் செலுத்தி வருவதால் நாம் நமது கற்பனைகளை இழந்துவிட்டோமா?

22.3 இன்றைக்கும், பொருள் தேடுதல் ஒன்றே குறிக்கோளாக, மனைவி மழலைகளைப் பிரிந்து கடல் கடந்து வெளிநாடுகளுக்குச் சென்று ஆண்டுக் கணக்கில் வீட்டையும் நாட்டையும் புறக்கணித்து வசிக்கும் நிலை நீடிக்கிறது. அவர்கள் பொருளாதார விடுதலை அடைந்துவிட்டதாக எணணி ஒரு வகையான போலி வாழ்க்கை வாழ்கின்றார்கள். அது சிந்திப்பதற்குரியது.

**23 ஊடலும் கூடலும்:** 23.1 காதலர் தம்முள் பரிமாறிக் கொள்ளும் பேரெண்ணமே ஊடல்(sulky mood)எனப்படும். அன்பின் அளவை அளியும் அளவுகோலே ஊடல். தவறு நிகழக்கூடாது, தன்மீது உள்ள தலைவனின் அன்பு வேண்டும் என்ற கருத்தை ஒட்டியது. அதனால் வேண்டும் என்றே உலகியல் அறிவை ஒட்டிய பலப்பல கற்பனைக் காரணங்கள் கண்டுபிடித்துத் தலைவி ஊடல் கொள்கிறாள்.

23.2 பரத்தையர் பிரிவையே கூறாது, வரைவின் மகளிரைக் கடிந்த வள்ளுவர், நாணம் சிறத்தற்கு புலவி நுணுக்கம் என்ற புதிய அத்தியாயம் படைத்துள்ளார். "ஊடல் புணர்ச்சியின் சிறப்பு அடிப்படை". புணர்தலின் ஊடல் இனிது. (1326) ஊடலும் அளவோடு உப்பு போல் இருக்கவேண்டும். ஊடாப்பணர்வால் இன்பம் குறையும். புணரா ஊடலால் அன்பு குறையும். என்பார் மாணிக்கம்.[6] முன் உண்ட உணவு செரிககாமல் மேலும் உண்ணல் கூடாது என்னும் உடலியல் உவமை மூலம் ஊடல் கூடலுக்கும் குறள் விதி கூறுகிறது. (குறள்-1326)

23.3 பகை என்பது காதலுக்கு இல்லை. காதலில் தோல்வியும் அடிமைத்தனமும் இல்லை. (1255) வெறுப்பவர் பின்னால் வெட்கத்தைவிட்டு ஓடுவது உலகியலில் சாதாரணமாகக் காணமுடியாத ஒன்று. காதல் வாழ்வின் சட்டங்கள், அன்றாட வாழ்வின் சட்டங்களுககு வேறானவை. மானம் இழந்தாலும் அன்பு வளரும் என்பது காதல் வாழ்க்கைக் கற்றுத்தரும் பாடம். இதனையே, "செற்றார் பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய் உற்றார் அறிவது ஒன்றன்று" (குறள்-1255) என்று கூறுகிறது. "பெண்கள் எல்லாரும் உன்னைப் பார்வையால் நுகர்வதால், நீ பரத்தன் ஆகிவிட்டாய்" என்கிறாள் தலைவி (குறள்-1311). "இந்தப் பிறவியில் பிரிய மாட்டேன்" என்று தலைவன் சொல்ல, (குறள்-1315) அப்படி என்றால், "இம்மை மாறி மறுமை ஆகிலும் நீ ஆகியர் விடுமோ என்று அழுகிறாள். "உன்னை நினைத்தேன்" என்ற தலைவனிடம், "மறந்தால் அல்லவா நினைக்கமுடியும், எனவே, உங்கள் அன்பு போலியானது." என்று ஊடுகிறாள் (குறள்-1316)

23.4 தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்கு நீர்

---

12. வள்ளுவம் ப. 197.

இந்நீர் ஆகுதி என்ற என்ற குறள் கருத்தே (1319) இதுபோன்ற கல்வி பிறர்க்கும் செய்வானோ எனத் தலைவி புலம்புவது,

"முயங்கி மயங்குகின்றாள் வெவ்வாய் உயிர்ப்பொடு விம்மிக் கலுழ்ந்து புலந்து நைந்தாள்

இவ்வாறு அருள்பிறர்க்கு ஆகும் எனநினைந்து இன்னகையே-என்று கோவையில் (366)' வந்துள்ளது. தும்மல் காரணமாகக் கூடத் தலைவி ஊடமுடியும் என்ற புதுமைப் புனைவு வள்ளுவரின் புலமைக்குச் சான்று. (குறள்-1312,1317)

**24. தோற்றவர் வென்றார்:** 24.1 எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக, வள்ளுவர், ***'தோற்றவர் வென்றார்'*** என்ற முரண்பாடுள்ள ஒரு கருத்தைத் தெரிவிக்கின்றார். போட்டி நிறைந்த உலகில், வென்றால் தானே வாழ்க்கை' அது எப்படி, தோற்றுப் போனவர் வெற்றி பெற்றதாகக் கூறமுடியும்? அன்புடையவர்களிடம் அடங்கித் தோற்பதுதான் அமைதியான நிறைவான வாழ்க்கையின் அடித்தளம்.. இதையே, 'Loose the battle and win the war' என்பார்கள். 'தோல்வி துலை அல்லார் கண்ணும் கொள்வதுதானே சால்பு'. (குறள்-986)

24.2 "அறத்திற்கு முரண் படாத காமமாக இருக்கின்றேன்," என்று கண்ணன் கீதையில் (7-11) கூறியதுதான் வள்ளுவர் கொள்கையும். அதனால்தான், 'பிறர் மனைவியை விரும்பாதே' என்று அறத்துப்பாலிலும், 'வவைரவின் மகளிரான பரத்தையரை நாடாதே' என்று பொருட்பாலிலும் தர்மத்திற்கு விரோதமான காமத்தைச் சாடுகிறார். காமத்துப்பாலிலும் பரத்தையர் பிரிவைப் பற்றிப் பேசவே இல்லை.

**25 தெய்வீகக் காதல்:** 25.1 ஏணிப்படிகளில் முழுதும் ஏறி இலக்கை அடையாமல் பாதியிலேயே நிற்பது போன்றது சிற்றின்பம். பெற்ற சிற்றின்பத்தைக் (பவ போகம்) கொண்டு, பெறாத பேரின்பத்தை (சிவபோகம்) ஊகித்துத்தான் உணரமுடியும். அதை யோகநெறி மூலம் அடையலாம். இறைவனை அடையும் முயற்சியில் ஈடுபட்டிருப்போர்க்கு இல்லற வாழ்வு ஒரு தடை இல்லை என்பதே குறள் கருத்தும். திருக்குறள் காமத்துப்பாலுக்கும் பழைய பேரின்ப உரை ஒன்று உண்டு என்று சொல்லப்படுகிறது. இல்லறத்திற்கு இயல்பான உரிமை பூண்ட இல்லாளின் துணை பெற்றவர்கள், இறைஅருளாளர் இராமகிருஷ்ண பரமஹம்சர், இராமலிங்க அடிகளார், தாயுமானவர் போன்றவர்கள். நம்பிஆரூரராகிய சுந்தரரோ, இருமகளிரை மணந்து அனுபவிப்பதற்கு இவ்வுலகுக்கு வந்தவர். பரவை என்பவரிடம் ஏற்பட்ட ஊடலைத் தீர்ப்பதற்காக, அவர் தான் வணங்கும் இறைவனையே தோழமை முறையில் தூது விடுத்தவர். போகத்தை யோகமாக்கும் நெறியில் நின்ற சுந்தரர், பரவையிடம் நுகர்ந்த இன்பத்தை ",..பரவை எனும் மெல்லியல் தன் பொன்னாரும் முலை ஓங்கல் புணர்குவடே சார்வாகப் பன்னாளும் பயில் யோகம் பரம்பரையின் விரும்பினார், "என பெரியபுராணம் (தடுத்தாட்கொண்ட புராணம்-181) பாடும்.

25.2 பேரின்பத்தை, "சொல்லொணாது இந்த ஆனந்தமே," என்பார் அருணகிரிநாதர். திருமூலர், இன்னும் ஒருபடி இறங்கி, "முகத்தில் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்

அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம், மகட்கு தாய்தன் மணாளனோடு ஆடிய சுகத்தைச்சொல் என்றால் சொல்லுமாறுஎங்ஙனே" (திருமந்திரம்-2944)என, சிற்றின்பத்தையே விவரிக்க இயலாமையைக் கூறுவார். கல்வி இன்பம் மறைபொருள் என்பதாலேயே அது அகம் எனப்பட்டது. அப்பட்டமாக இல்லாமல், நுணுக்கமாக கையாளப்பட வேண்டியது. அதை, இன்றைய Internet கலாச்சாரம் சந்தைப்பொருளாக்கிக் காட்ட அதன் பிடியில் இளையசமுதாயம் சிக்கித்தவிக்கறது.

**26 இன்றைய பார்வை:** 26.1. இன்று, எதையும் ஆழமாகப் பார்க்காத ஒரு மேம்போக்கும், 'take it easy' என்ற மனோபாவமும் பெருகியுள்ளது. நின்று நிதானித்து செயல்பட நேரம் இல்லையா அல்லது ஆர்வம் இல்லையா என்பது விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று. காட்சியில் புலப்படுவது (Tangible)என்றால் மட்டும் ஆர்வம் காட்டும் போக்கு உள்ளது. 'Book for the hour' நன்கு விலை போகிறது (best seller) 'Books for ever' விற்பனையாகவில்லை. 26.2. குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டும் நிகழச்சியை ஓவியர் விரசமல்லாமல் வரையும் ஓவியத்தில் தாய்மையும் கலையுமே

கண்ணுக்குத் தெரியும். திரைப்படங்களிலும், காதல் நிகழ்வுகளை இலைமறை காயாக சொல்லுகிற விதத்தில் சொல்லாவிட்டால் இளைய தலைமுறையினர்க்கு ஏற்படும் பாதிப்புக்களை இன்றைய திரைப்பட இயக்குநர்கள் உணரவேண்டும். கூரிய இருமுனைக்கத்தி போன்றது பால்உணர்வு. 27.2. அதை நாகரிகமாக அகப்பாடல்கள, குறிப்பாகக் குறளும் கோவையும், கையாண்டுள்ளன. அதனால்தான் காலம் கடந்தும் அவை அழியாமல் வாழ்வதுடன் சமய நூல்களில் உத்திகளாகவும் உவமைகளாகவும் எடுத்தாளப்பட்டுள்ளன. உடல்கூறு விளக்கமும் காம இன்பச் செய்முறையும் வாத்ஸாயனர் கூறுவது போல் கூறாது, காமத்துப்பாலில் உள்ள உணர்வுகளைப் படம் பிடித்துப் பாடத்திட்டம் வகுத்துப் படிப்படியாகப் புகட்டும் 'பாலியல் கல்வி' ஆக்கி உள்ளார் வள்ளுவர். காமத்துப்பால் வயது வந்தோர் அனைவருக்கும் கட்டாயப்பாடமாக்குவதில் தவறில்லை.

27 **மானிடர் காதல்:** மனிதனின் மூளை பின்னிப்பிணைந்த இருகூறுகளாக உள்ளது (Motor and sensory fibres from each cerebral hemisphere cross over in the medulla to control the opposite of the body) என்ற அறிவியல் உண்மையும் இங்குச் சிந்திக்கத்தக்கது. இறைவன் நிலை அருவம். அருவுருவம் உருவம் ஆனது என்றும், இறைவன் உருவமாக முதன் முதலில் வெளிப்பட்ட கோலம் '(உவமையொருபாகன்) எனவும் ஆகமம் கூறும். தன் உடலிலேயே ஒருபங்கை சிவன் உமைக்குக் தந்துள்ளதையும் கூறும் புராண வரலாறுகளைப் பின்பற்றிப் பாடும், பாரதி, பிரமன் கலைமகளைத் தன் நாவில் இருத்திக் கொண்டதையும் கூறும் புராண வரலாறுகளைப் பின்பற்றிப் பாடும், பாரதி,

"காதல் செயும் மனைவியே சக்தி கண்டீர்

கடவுள் நிலை அவளாலே எய்த வேண்டும்" என்று பாடுகிறார். அவரே

'..கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும். ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே..காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்' (attaining Immortality) என்பார்.[7] வரைமுறைக்குட்பட்டு வாழ்ந்தால், காதல் வாழ்வும், ஆன்மிக உயர் வாழ்வாகப் பரிணமிக்கும்.

28 தலைவன் தன்னிகரில்லாதவனாகவும், நல்லவனாகவும், ஊக்கமும் உறுதியும் உடையவனாகவும் பெருந்தகையாகவும் ஒழுக்கம் உள்ளவனாகவும் உதவி புரிபவனாகவும் உதவி குணநலங்களையே அணிகலன்களாக உடையவளாகவும் திருமகள் போன்ற அழகுடையவளாகவும்(ideal role model) ஆக இரு நூல்களுமே சித்தரித்துள்ளன. காண்பவர் காட்சியைப் பொறுத்து வேதமாகவும், ஆகம நூலாகவும், காம நூலாகவும், தர்க்க – நியாய நூலகவும் இலக்கண நூலாகவும் புலப்படுவது திருக்கோவையார் என்பதை நூல்சிறப்புப் பாடல் உணர்த்தும். அதே போல், 'எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்..' என்னும் மதுரைத் தமிழ்நாகனாரின் திருவள்ளுவமாலைச் செய்யுளும் திருக்குறளின் பெருமையைப் பறைசாற்றுகின்றது. மேற்குறிப்பிட்ட கருத்துக்களால், அற இலக்கிய நூலான திருக்குறளும் சமய இலக்கிய நூலான திருக்கோவையாரும் ஒருவாசகமே என்ற குறிப்பில் கூறும் ஔவையின் கூற்றுத் தெளிவாகின்றது.

29 காலம் மாறிவிட்டது. எல்லாவற்றிலும் பெண்கள் சரிநிகர் சமானமாக ஈடுபடுகிறார்கள். அதனால், பெண்கள் மனத்தில் நிரந்தரமாக இடம் பெறவும், இடத்தைத் தக்கவைத்துக் கொள்ளவும், ஆண்களும் ஊடல் கொள்ள வேண்டிய திருணம் வந்துள்ளது. உலக மயமாக்கலின் தாக்கங்களால் நமது கலை பண்பாடு மரபுகள் அழிந்துவிடும். நெருக்கடியில் உள்ளன. நாம் அவற்றை அழியவிடக்கூடாது. உலகம் எவ்வளவு மாறினாலும், அசைக்கமுடியாத ஆணிவேர்களாய் அடித்தளமாய் நமது மாறாத தத்துவங்கள் நிலைத்திருக்க வேண்டும். அதை நமது முன்னோர்கள் நமக்கு எப்படி அளித்தார்களோ அதே விதத்தில் நமது சந்ததிகளுக்கும் விட்டுச் செல்வது நமது தலையாய கடமை. வள்ளுவரும் மாணிக்கவாசகரும் கண்ட காதல் தத்துவங்கள் அன்றைய உலகிற்கு மட்டும் அல்ல, இன்றைய செல்ஃபோன் காதல், இன்டர்நெட் காதல் பரவி வரும் உலகிற்கும் (Globalised village) ஏற்றவையே. அவை,

---

13. பாரதி சுயசரிதை 49 & 50 ப. 268-269.

பொதுவானவை மட்டுமல்ல. மாறாதவை கூட. AIDS நோய் மலிந்து இன்னலுறும் இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டுக்கும் அந்தக்கால காதல் உண்மைகள் பொருத்தமானவையே, தேவையானவையே என்பதை வலியுறுத்துவதே கட்டுரையாளரின் நோக்கம்.

## துணை நூல்களள


1. அருணைவடிவேலு முதலியார், சி, தெய்வப்பனுவல்களில் திருக்குறள், 1992, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்,ப.303-344
2. அருணைவடிவேல் முதலியார், திருவாசகம் திருக்கோவையார் குறிப்புரை, 1966 தருமை ஆதினம், தருமபுரம்,ப.680-1108
3. கனகசபாபதி முதலியார், திருக்கோவையார் இயல்பு, 1936, பழனியாண்டிப் பிள்ளை கம்பனி, சென்னை,ப.47
4. கந்தசாமி, சோ.ந.திருக்குறள் கூறும் உறுதிப் பொருள்,2002, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்,ப284, ரூ120
5. குழந்தைசாமி,வா.செ., வாழும் வள்ளுவம், 2000., பாரதி பதிப்பகம், சென்னை,ப.120ரூ.24
6. சாரங்கபாணி, இரா, வள்ளுவர் வகுத்த காமம், 1994, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், ப.183
7. சண்முகம் பிள்ளை, மு அகப்பொருள் மரபும் திருக்குறளும், 1980, சென்னைப்பல்கலைக்கழகம், ப.265
8. சாரங்கபாணி, இரா, திருக்குறள் உரை வேற்றுமை,1992., அண்ணாமலைப்பல்கலைக் கழகம்.ப.367
9. சாமிநாத ஐயர், உ,வே., திருவள்ளுவரும் திருக்குறளும், 1936, கலைமகள் வெளியீடு. சென்னை.ப.34
10. சிவலிங்கனார், ஆ,எட்டாந் திருமுறை, 1992, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை,ப.109-125
11. சிவப்பிரகாசர் நால்வர் மணிமாலை, 1970, குமரன் செந்தமிழ் நூற்பதிப்புக்கழகம், சிதம்பரம்,ப174
12. சுந்தரம்பிள்ளை,பெ., மனோன்மணீயம் 1963, கழகம், சென்னை.ப.258
13. செங்கல்வராய பிள்ளை, வ.சு. திருக்கோவையார் ஒளிநெறி, 1970, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை,ப.380
14. ஜகந்நாதன், கி.வா. திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு, 2004 ராமகிருஷ்ணமிஷன் வித்யாலயம், கோவை,ப.955
15. தண்டபாணி தேசகர்,ச., திருக்குறள் அமைப்பும் அழகும், 2002, தென்றல் நிலையம், சிதம்பரம்,ப176
16. தண்டபாணி தேசிகர்,ச., திருக்குறள் உரைக்களஞ்சியம். காமத்துப்பால், 1990, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.ப.671
17. ஸ்ரீதாயுமான சுவாமி பாடல்கள், 2000, ஸ்ரீராமகிருஷ்ணதபோவனம், திருப்பராய்த்துனர,ப.423
18. நாமக்கல் கவிஞர், திருவள்ளுவர் இன்பம், 2001, பூம்புகார் பதிப்பகம், சென்னை ப.136
19. மணவாளன், அ.அ. திருக்குறள் காமத்துப்பாலும் அகப்பொருள் மரபும் ப.309-320
20. மணிக்கம், வ.சுப. தமிழ்க் காதல், 2002, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்,.,ப.386ரூ120
21. மாணிக்கம், வ.சுப., வள்ளுவம், 1993., மணிவாசகர் பதிப்பகம், சென்னை, ப.172-197, ரூ120
22. மாணிக்கவாசகர், திருக்கோவையார், 1997, தருமை ஆதீனம், மயிலாடுதுறை, ப.657
23. மோகனராசு.கு., திருக்குறள் ஆய்வும் மதிப்பீடும், 1987., சென்னைப்பல்கழைக்கழகம், ப.439
24. துறை அரங்கசாமி, காமத்துப்பாலா இன்பத்துப்பாலா, 1988, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.ப.

25. மீனாட்சிசுந்தரம், தெ., பொ., வள்ளுவர் கண்ட நாடும் காமமும், 1957, பழனியப்பா பிரதர்ஸ், சென்னைப.214
26. மீனாட்சிசுந்தரம், தெ., பொ., வள்ளுவரும் மகளிரும். 1930., சாது ரத்தின சற்குரு புத்தகசாலை, சென்னை ப.168
27. Meenakshisundaran, T.P., Philosophy of Tiruvlluvar, 1999, Madurai Kamaraj University, Madurai P.159.
28. முருகரத்னம், தி, குறள் நெறி, 1979, சர்வோதய இலக்கியப்பண்ணை, மதுரைப.97
29. முருகவேள், ந.ரா. திருச்சிற்றம்பலக் கோவையார், 1987, இராமலிங்கர் பதிப்பகம், சென்னை 15, ப.216
30. வரதராசன், மு.திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், 1994, பாரி நிலையம், சென்னை ப426
31. வரதராசன், மு குறள் காட்டும் காதலர், 1994, பாரிநிலையம், சென்னை ப.118
32. வச்சிரவேல், க, திருக்குறள் கூறும் ஒழுக்கநெறி, 2001., தென்றல் நிலையம், சென்னை ப.102,ரூ.25
33. வேங்கடகிருஷ்ணன், M.A, முதலாயிரம், 1999, கீதாசார்யன், சென்னை ப.226-305
34. வெள்ளைவாரணன், க பன்னிரு திருமுறை வரலாறு, 1969, இரண்டாம் பகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம். ப.1-346
35. Kulandai Swamy, V.C The Immortal Kural, 1994, Sahitya Akademi, New Delhi, p.109
36. Maharajan, S, Thiruvalluvar, 1989, Sahitya Akademi, New Delhi, p.93
37. பாரதியார் கவிதைகள், 1976, பூம்புகார் பிரசுரம், சென்னை.ப.464
38. Natarajan, D.Studies in Tirukkovaiyar, 1964, M.Litt Thesis, Madras University, p.300
39. Ramachandran, TN, Tirukkovaiyar, 1989, Translation, Tamil University, Thanjavur p.436
40. ஔவையார்., நீதிநூல் தெளிவுரை, 2002, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.,ப.67